**தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது), அவர்களின் செயல்முறைகள்**

**ஆணை பிறப்பிப்பவர் – திருமதி. அ.கு.பிரவீணாகுமாரி, பி.இ.,**

ந.க.அ1 -69851-2024 நாள். 05.07.2024

---

| | |
|---|---|
| பொருள் | **நேரடி நியமனம்** – தமிழ்நாடு அமைச்சுப்பணியாளர் தொகுதி – ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு தொகுதி IV – தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் (தேர்வு நாள் - 24.07.2022) தேர்வு செய்யப்பட்டு தஞ்சாவூர் மாவட்ட வருவாய் அலகிற்கு இளநிலை வருவாய் ஆய்வாளர் பதவி ஒதுக்கீடு செய்யப்பட்ட திரு. ஆர்.ராஜு என்பவருக்கு தமிழ்வழிச்சான்றிதழின் (PSTM) மெய்த்தன்மை உறுதிசெய்யப்பட்டது - பணிவரன்முறை செய்து ஆணையிடுதல். |
| பார்வை | 1. செயலர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் சென்னை, அவர்களின் கடிதம் எண்.1826/PSD-D1/2023 நாள்.25.08.2023 மற்றும் 16.11.2023<br>2. தஞ்சாவூர், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) (பொ) அவர்களின் செயல்முறை ந.க.422-2022-அ1 நாள்.20.09.2023 மற்றும் 28.11.2023<br>3. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (நாட்டு நலப்பணி திட்டம்) அவர்களின் செயல்முறை ஆணை ந.க.030574-எம்-இ1-2021 நாள்.04.04.2024<br>4. திண்டுக்கல் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் கடித ந.க.1749-ஆ5-2024 நாள்.06.06.2024<br>5. மற்றும் தொடர்புடைய ஆவணங்கள். |

%%%%%%%

**ஆணை**

பார்வை 1-இல் காணும் கடிதத்தின்படி தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய தொகுதி-IV (Date of Examination-24.07.2022) மூலம் தேர்வு செய்யப்பட்டு, தஞ்சாவூர் மாவட்ட வருவாய் அலகிற்கு தமிழ்வழிக் கல்வி (PSTM) இடஒதுக்கீடு மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்டு இளநிலை வருவாய் ஆய்வாளராகப் பணிபுரிந்து வரும் திரு. ஆர்.ராஜு என்பவருக்கு பார்வை 4-இல் காணும் கடிதம் மூலம் தமிழ்வழிச்சான்றின் மெய்த்தன்மை உறுதி செய்யப்பட்டதைத் தொடர்ந்து, தமிழ்நாடு அரசு ஊழியர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016 விதிகள், விதி 28 (1)-இன்படி அவருக்கெதிரே (கலம் 5-இல் கண்டவாறு) பணியேற்ற நாள் முதல் இளநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில், மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் / சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் நிலுவையில் இருக்கும் நீதிப்பேராணை மனுக்களின் தீர்ப்புரைகளுக்குட்பட்டு, கீழ்க்கண்டவாறு பணிவரன்முறை செய்தும், தகுதிகாண்பருவம் துவங்கி விளம்புகை செய்தும் இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

| வ. எண் | இளநிலை வருவாய் ஆய்வாளர் பெயர் (திருவாளர்) | பணிபுரியும் அலுவலகம் | பணி ஏற்பு நாள் | பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. | ஆர்.ராஜு | வட்ட அலுவலகம், பேராவூரணி | 13.10.2023 மு.ப | 13.10.2023 மு.ப |

A. K. [signature]

மாவட்ட ஆட்சியரின்
நேர்முக உதவியாளர் (பொது),
தஞ்சாவூர்.

பெறுநர் - தொடர்புடைய நபர் - உரிய அலுவலர் மூலமாக.

நகல்

1. செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை - 600 003.
2. வட்டாட்சியர், பேராவூரணி.
(பணிவரன்முறை ஆணையை தொடர்புடைய நபருக்கு சார்வு செய்திடவும், தனியரின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் செய்திடவும் மேலும், தகுதிகாண்பருவம் நிறைவு செய்தல் சம்மந்தமாக உரிய காலத்தில் அறிக்கை அனுப்பிவைத்திடவும் சம்மந்தப்பட்ட அலுவலருக்கு அறிவுறுத்தப்படுகிறது).
3. அ1 இருக்கைக்கு